# இறுதியில் விடுதலை

## த ஸட்பரி வேலி பள்ளி

ஆங்கிலத்தில் : டேனியல் க்ரீன்பெர்க்

தமிழில் : உத்ரா துரைராஜன்

பாகம் 1

# 1
# கணக்கு

ஒன்பது முதல் பன்னிரெண்டு வயதுள்ள ஒரு டஜன் சிறுவர்களும் சிறுமியரும் என் முன்பு அமர்ந்திருந்தனர். ஒரு வாரம் முன்புதான், கணக்குப்போட சொல்லித்தரும்படி அவர்கள் என்னைக் கேட்டுக்கொண்டார்கள். கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், பிறவற்றையும் கற்க விரும்பினார்கள் அவர்கள்.

“நீங்களாக இதைப் பயில விருப்பப்படவில்லை, இல்லையா?” என்றேன் நான், அவர்கள் என்னை முதன்முறை அணுகும்போது.

“நாங்கள் விரும்புகிறோம். கட்டாயமாக. நாங்கள் விரும்புகிறோம் என்பது நிச்சயம்,” என்பதே அவர்களின் பதில்.

“நிசமாகவெல்லாம் நீங்கள் ஒன்றும் விரும்பவில்லை,” நானோ அடம்பிடித்தேன். “ஒருவேளை உங்கள் வீட்டருகில் உள்ள நண்பர்கள், உங்கள் பெற்றோர், உங்கள் உறவினர்கள் நீங்கள் இதனைச் செய்யவேண்டும் என விருப்பப்படலாம். ஆனால் நீங்கள் உள்ளபடி இன்னமும் விளையாடுவீர்கள், அல்லது வேறேதோ செய்வீர்கள்தானே?”

“எங்களுக்கு என்ன வேண்டும் என்பது எங்களுக்குத் தெரியும். மேலும் கணக்கு பயில ஆசைப்படுகிறோம். கற்றுத் தாருங்கள், நாங்கள் நிறுபிக்கிறோம். எல்லா வீட்டுப்பாடத்தையும் நாங்கள் முடித்துவிடுவோம். மேலும் எங்களால் இயன்றவரை கடினமாக உழைப்போம்.”

அதற்குப்பின் நான் ஒத்துக்கொள்ள வேண்டியதாயிற்று, சந்தேகத்துடன்தான். வாடிக்கையான பள்ளிகளில் (regular schools) எண்கணக்கு கற்பிக்க ஆறு வருடங்கள் ஆகும் என அறிவேன். சில மாதங்களில் அவர்களின் இந்த ஆர்வம் தணிந்துவிடும் என்பதில் நான் உறுதியாய் இருந்தேன். ஆனால் எனக்கு வேறுவழி கிடையாது. ரொம்ப வற்புறுத்தினார்கள். என்னை வசமாய் சிக்க வைத்து விட்டார்கள்.

நெறிப்படுத்தத் தேவையான ஒரு பாடப்புத்தகம்தான் என்னுடைய மிகப்பெரும் பிரச்சனையாக இருந்தது. “புதிய கணக்கை” உருவாக்குவதில் நான் முன்னர் ஈடுபட்டிருந்தேன், அதனை வெறுக்கும் நிலைக்கு வந்துவிட்டேன். அப்போதெல்லாம், அந்தப் பணியை செய்யும் சமயத்தில், ஸ்புட்னிக் ஏவிய பின்னான கென்னடியின் காலகட்டம் அது - இளம்கல்வியாளர்கள் எங்களுக்கு இருந்த சந்தேகங்கள் வெகு குறைவு. அருவதர்க்கம் (abstract logic), கணவியல் (set theory), எண் கோட்பாடு (number theory) மற்றும் கணித விளையாட்டுகள் என அனைத்தாலும் சூழப்பட்டிருந்தோம். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாய் பிற வெளிநாட்டுக் கணித வல்லுனர்கள் விளையாடி வந்த கணித விளையாட்டுகளின் அழகால் நிரம்பியிருந்தோம். ஒருவேளை நாங்கள் வயலில் பாடுபடும் விவசாயிகளுக்கான ஒரு விவசாயப் படிப்பை வடிவமைக்க முற்பட்டிருந்தால், நாங்கள் வேதியியல், மரபியல் மற்றும் நுண்ணுயிரியியல் என்றே ஆரம்பித்திருப்போம். அதிர்ஷ்டக்கார உலகமப்பா இது! உலகின் பசித்த மக்களுக்கு நல்லதாய் போனது, எங்களை யாரும் அப்படி வடிவமைக்கக் கேட்டுக்கொள்ளவில்லை. தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்!

“புதிய கணக்கின்” போலித்தனத்தையும், எளிதில் புரிந்துகொள்ள முடியாத தன்மையையும் வெறுக்கவே ஆரம்பித்திருந்தேன். நூற்றில் ஒரு கணித ஆசிரியருக்குக் கூட

அது எதைப் பற்றியது என தெரிந்திருக்கவில்லை. ஆயிரத்தில் ஒரு மாணவனுக்கும்கூட அது புரியவில்லை. மக்களுக்கு எண்ணுவதற்கும், தினப்படி கணக்கு பார்க்கவும் கணித அறிவு தேவைப்பபடுகிறது. அதனை ஒரு கருவியாக எப்படி பயன்படுத்துவது என்பதை அறிவதே அவர்களின் தேவை. என் மாணவர்களுக்கு அதுதான் இப்போது வேண்டும்.

கையில் உள்ள வேலைக்கு சரியாய் பொருந்தியது, எங்கள் நூலகத்தில் நான் கண்டெடுத்த ஒரு புத்தகம். 1898ம் ஆண்டு எழுதப்பட்ட ஒரு கணக்கு - அறிமுகப் புத்தகம் அது. கனமாய், சின்னதாய், ஆயிரக்கணக்கான பயிற்சிகள் நிரம்பிய ஒன்று. அடிப்படைகளை துல்லியமாகவும் விரைவாகவும் போட இளம்மனங்களை பயிற்றுவிக்க எழுதப்பட்டது.

பாடவேளை துவங்கியது - சரியான நேரத்தில். அது ஒப்பந்தத்தின் ஒரு பகுதி. “நீங்கள் மெய்யாகவே ஆர்வமாக இருக்கிறீர்கள், இல்லையா?,” நான் சவாலாய் கேட்டேன், “அப்படியானால், நான் உங்களை வகுப்பறையில் சரியான நேரத்துக்கு எதிர்பார்க்கிறேன் - காலை 11.00 மணி, ஒவ்வொரு செவ்வாய் மற்றும் வியாழனும். ஐந்து நிமிடங்களே தாமதமானாலும், பாடவேளை ரத்தாகி விடும். இரண்டு பாட வேளைகள் தவறினால் போச்சு - அதற்கப்புறம் கற்பித்தல் கிடையாது.” “நாங்கள் இதற்குத் தயார்,” என்றார்கள், கண்ணில் ஓர் மகிழ்ச்சித் துடிப்புடன்.

அடிப்படை கூட்டல் கற்பிக்க இரண்டு வேளைகள் தேவைப்பட்டன. எல்லாவற்றையும் கூட்டக் கற்றுக்கொண்டார்கள். நீளமான ஒல்லியான எண்வரிசைகள், குட்டையான குண்டான வரிசைகள், நீளமான குண்டான வரிசைகள், டஜன் கணக்கில், கொத்துக் கொத்தாய் பயிற்சிக்கணக்குகள் செய்தார்கள். மேலும் இரண்டு பாடநேரத்தை, கழித்தல் எடுத்துக்கொண்டது. ஒன்றே

போதுமானதாயிருந்திருக்கும். ஆனால் “கடன் வாங்க” கொஞ்சம் அதிக விளக்கம் தேவைப்பட்டது.

அடுத்தது பெருக்கலும், வாய்ப்பாடுகளும். எல்லாரும் வாய்பாடுகளை மனப்பாடம் செய்யவேண்டியிருந்தது. வகுப்பறையில் மீண்டும் மீண்டும் ஒவ்வொருவரும் கேள்வி கேட்கப்பட்டார்கள். அப்புறம் விதிமுறைகள். அதைத் தொடர்ந்து செய்முறைகள்.

அவர்கள் எல்லோரும் உற்சாகமாயிருந்தார்கள். எல்லா நுணுக்கங்களையும், விதிமுறைகளையும் உள்வாங்கிக் கொண்டே பயணம் செய்தார்கள். கற்றவை எல்லாம் அவர்களின் உள்ளே ஊடுருவதை உணர்ந்தார்கள். நூற்றுக்கணக்கான பயிற்சிகள், வகுப்பறை கேள்விக்கணைகள், ஒப்புவித்தல் சோதனைகள், அத்தனையும் சேர்ந்து பாடத்தை அவர்களின் தலைக்குள் திணித்தன.

இருந்தும் அவர்கள் வரவே செய்தார்கள், அவர்கள் எல்லாருமே. வகுப்பு நகர்வதற்கு ஏதுவாக, அவர்கள் ஒருத்தருக்கு ஒருத்தர் தேவையானபோது உதவிக்கொண்டார்கள். பன்னிரெண்டு வயதினருடன் ஒன்பது வயதினர். சிங்கங்களும் ஆட்டுக் குட்டிகளும் அமைதியாய் ஒத்தார்போல் கூட்டாய் அமர்ந்திருந்தார்கள். சீண்டல்கள் இல்லை, அவமாங்கள் இல்லை.

வகுத்தல் - நெடிய வகுத்தல் முறை. பின்னங்கள். சமவிகிதங்கள். வர்க்க மூலங்கள்.

சரியாய் 11.00 மணிக்கு அவர்கள் வந்தார்கள். அரைமணி நேரம் தங்கினார்கள், அப்புறம் வீட்டுப்பாடத்தோடு விடைபெற்றார்கள். அடுத்தமுறை வரும்போது எல்லா வீட்டுப் பாடத்தையும் முடித்துவிட்டு வந்தார்கள். அவர்கள் எல்லோருமே.

இருபது வாரங்களில், இருபது மணிநேர நேரடி வகுப்புகளுக்குப் பின், எல்லாவற்றையும் அவர்கள்

முடித்திருந்தார்கள். ஆறுவருட பாடங்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் அந்தப் பாடங்கள் அத்துப்படி.

வகுப்பு நிறைவை நாங்கள் உற்சாகமாய் கொண்டாடினோம் எங்களின் கொள்கைப்பிடிப்பீன் வெற்றியைக் கண்டு அதிசயித்தது - அது முதலுமல்ல, கடைசியுமல்ல. அவர்கள் கங்கணம் கட்டிக்கொண்டு மாங்குமாங்கென உழைத்தார்கள்.

இந்நிகழ்வை கண்ணுறுவதற்கு என்னையே நான் தயார் செய்துகொண்டிருந்திருக்க வேண்டுமோ ஒருவேளை? எல்லாம் முடிந்து ஒருவாரம் ஆனபின், ஆலன் வைட்டிடம் நான் பேசினேன். ஆரம்ப கணிதத்தை பல ஆண்டுகள் பொதுப் பள்ளிகளில் நடத்திய அனுபவமிக்கவர் அவர். மேலும் சமீபகாலத்தில் உருவானவையும் மிகச் சிறந்தவையுமாய் உள்ள அனைத்து கற்பித்தல் முறைகளையும் அவர் நன்கு அறிவார்.

என் வகுப்பு பற்றிய கதையை அவரிடம் கூறினேன்.

அவர் ஆச்சரியப்படவில்லை.

“ஏன் இல்லை?” என நான் கேட்டேன், அவரின் உடல்மொழியால் மேலும் அதிசயித்து என் 'வால்பெட்டலங்களின்' கற்றல் வேகமும், செவ்வனே கற்ற தன்மையும் என்னை கிரங்கடித்தன. அதிலிருந்து மெல்ல மெல்ல வெளிவந்து கொண்டிருந்தேன்.

“பாடப்பொருள் அந்த அளவு ஒன்றும் கடினம் கிடையாது என்பது எல்லாருக்கும் தெரிந்ததுதான். எது கடினம், முடியாத காரியம் என்றால் அந்தச் சிறார்களின் தலைக்குள் அவர்கள் வெறுக்கும் ஒவ்வொரு படியையும் உள்ளே புகுத்துவதுதான். ஆண்டாண்டுகளுக்கு தினம் தினம், கொஞ்சம் கொஞ்சமாய் அவற்றை சம்மட்டி வைத்து அடித்து உள்ளிடுவதே எங்களிடம் உள்ள ஒரே வழி. அப்படியும் கூட அது வேலை செய்வதில்லை. பெரும்பாலான ஆறாம் வகுப்பினர் கணித திறனற்றவர்களாக

இருக்கிறார்கள். கற்க விரும்பும் ஒரு குழந்தையை என்னிடம் தாருங்கள். இருபது மணிநேரத்தில் நல்ல பலன் கிடைக்கும்.

அது சாத்தியம் என நினைக்கிறேன். அதற்கப்புறம் என்றுமே அதற்கதிகமான நேரத்தை இது எடுத்துக் கொள்ளவில்லை.

# 2

# வகுப்புகள்

நாம் வார்த்தைகளில் கவனமாக இருக்கவேண்டும். இரண்டு பேருக்கு அவை ஒரே பொருளைத் தருவது கூட ஒரு அதிசயம்தான். அவ்வப்போது அவை ஒரே பொருளைத் தருவதில்லை. ‘அன்பு,’ ‘அமைதி,’ ‘நம்பிக்கை,’ ‘குடியாட்சி’ - இந்த வார்த்தைகளோடு ஒவ்வொருவரும் ஒரு வாழ்க்கை அனுபவத்தை, ஒரு உலகப் பார்வையை கூடக் கூட்டி வருவார்கள். மிக அரிதாகவே இன்னொருத்தரோடு இவைவெயல்லாம் ஒத்துப்போகும் என்பது நாம் அறிந்ததே.

‘வகுப்பு’ எனும் வார்த்தையை எடுத்துக்கொள்ளலாம். பள்ளிகளே இல்லாத கலாச்சாரங்களில் இது எதனை உணர்த்தும், இது என்ன பொருள்படும் என எனக்குத் தெரியாது. ஒருவேளை அவர்களிடம் இந்தச் சொல்லாடலே இல்லாமலும் இருக்கலாம். இதனை வாசிக்கும் பெரும்பாலோருக்கு, இந்தப் பதமானது ஒரு பிம்பப் பெட்டகத்தை கண்முன் நிறுத்தும் : ஒரு ‘ஆசிரியரும்’ நிறைய ‘மாணவர்களும்’ இருக்கும் ஓர் அறை, நாற்காலிகளில் அமர்ந்திருக்கும் மாணவர்கள், நின்றுகொண்டோ அல்லது அமர்ந்துகொண்டோ இருக்கும் ஆசிரியரிடமிருந்து ‘கட்டளைகள்’ பெறுவது. மேலும் பலவற்றை அது உணர்த்தும் : ஒரு ‘பாடவேளை’, பாடம் நடத்த ஒதுக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட காலஅளவு, வீட்டுப்பாடம், ஒரு பாடப்புத்தகம், வகுப்பில் உள்ள எல்லா மாணவர்களுக்கும் புரியும்படியாக தொகுக்கப்பட்ட பாடப்பொருள்.

மேலும் அது உணர்த்துபவை : அயர்ச்சி, இயலாமை, அவமானம், சாதித்தல், தோல்வி, போட்டி.

சட்பரி பள்ளியில் இந்த வார்த்தை அடியோடு வேறொன்றை உணர்த்துகிறது.

சட்பரி பள்ளத்தாக்கில், வகுப்பு என்பது இரண்டு சாராருக்கு இடையேயான ஓர் உடன்படிக்கை. குறிப்பிட்ட எதையோ கற்க வேண்டும் என முடிவுசெய்த ஒருவரிடமோ அல்லது சிலரிடமோ துவங்குகிறது அது. அவர்கள் கற்க விரும்புவது அல்ஜீப்ரா அல்லது ஃப்ரெஞ்ச், இல்லையேல் இயற்பியல், எழுத்துக் கூட்டி உச்சரித்தல், செய்யுள் அல்லது பானை வினைதல், எதுவாகவேணும் இருக்கலாம். மிகப்பல சமயங்களில், அவர்கள் தாங்களாகவே அதை எப்படிச் செய்யவேண்டும் எனும் வழிவகையை ஒரு புத்தகத்தையோ, ஒரு கணினி வழிமுறையையோ கண்டுபிடித்துவிடுகிறார்கள், இல்லையேல் பிறர் செய்வதை கவனிக்கிறார்கள். அவ்வாறு நடந்தால், அது வகுப்பல்ல. அது வெறும் கற்றலே.

சில சமயங்களில் அவர்கள் தனியாக, தானாக செய்ய முடியாமல் போவதுண்டு. அவர்களுக்கு உதவும் ஒருவரை, கற்றல் நடைபெறத் தேவையானதை துல்லியமாகத் தர ஒப்புக்கொள்ளும் ஒருவரை அவர்கள் தேடுகிறார்கள். அந்த நபரைச் கண்டடைந்தபின், ஒரு ஒப்பந்தத்துக்கு வருவார்கள்: “நாங்கள் இதை இதைச் செய்வோம், மேலும் நீங்கள் இதை இதைச் செய்வீர்கள் - சரியா?” எல்லா சாராருக்கும் இது ஒத்துப்போனால், ஒரு வகுப்பை அவர்கள் துவக்கிவிட்டார்கள்.

இந்த ஒப்பந்தத்தைத் துவக்கியவர்கள் “மாணவர்கள்” என அழைக்கப்படுவர். அவர்கள் இதைத் துவக்கவில்லை எனில், வகுப்பு இல்லை. பல சமயங்களில், பள்ளியில் உள்ள குழந்தைகள் தாங்கள் என்ன கற்க விரும்புகிறார்கள், எப்படி அதனைக் கற்கவேண்டும் என்பதற்கெல்லாம் அவர்களே

வழிகண்டுவிடுவார்கள். வகுப்புகளை அவர்கள் அதிகமாக பயன்படுத்துவதே கிடையாது.

மாணவர்களோடு இந்த ஒப்பந்தத்தை முடிப்பவர்கள் “ஆசிரியர்” என அழைக்கப்படுவர். ஆசிரியர் என்பவர் பள்ளியில் உள்ள பிற மாணவர்களாகக் கூட இருக்கலாம். பொதுவாக, அவர்கள் இந்தப் பணியைச் செய்ய வேலையில் அமர்த்தப்பட்டவர்கள்.

சட்பரி வேலியில் மாணவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையிலான ஒப்பந்தம் பேசுவதற்குத் தயாராக ஆசிரியர்கள் இருக்கவேண்டும். ஆசிரியர் பணியில் சேர விரும்பும் பலரிடமிருந்து பள்ளிக்கு நிறைய விண்ணப்பங்கள் வருகின்றன. அவர்களில் பலர், பிள்ளைகளுக்கு தங்களால் எவ்வளவு ‘தரமுடியும்’ என்பது பற்றி பக்கம் பக்கமாகக் கூறுகிறார்கள். அத்தகையவர்கள் பள்ளியில் அப்படி ஒன்றும் பெரிதாகச் செய்வதில்லை. மாணவர்கள் எதை கிரகிக்க விரும்புகிறார்கள் என்பதே எங்களுக்கு முக்கியம். ஆசிரியர்கள் என்ன தர விரும்புகிறார்கள் என்பதல்ல. பல தொழில்முறை ஆசிரியர்களுக்கு இதனை சீரணிப்பது கடினம்.

வகுப்பு ஒப்பந்தத்தில் பலவித பதங்களும் உண்டு - பாடப் பொருள், நேரங்காலம், ஒவ்வொரு சாரருக்கும் அதில் உள்ள கடமைகள், பங்களிப்புகள் என. எடுத்துக்காட்டிற்கு, இந்த உடன்படிக்கை நிகழ வேண்டுமனால், குறிப்பிட்ட நேரங்களில் மாணவர்களை சந்திக்க ஆசிரியர் ஒப்புக்கொள்ள வேண்டும். இந்த நேரமானது வரையறுக்கப்பட்ட பாடவகுப்பு நேரமாக இருக்கலாம் - ஒவ்வொரு செவ்வாய்க் கிழமையும் காலை 11மணிக்குத் துவங்கி ஒரு அரைமணிநேரம் என்பதுபோல். அல்லது அவை மாறக்கூடியதாகவும் இருக்கலாம், எப்போதெல்லாம் நமக்கு கேள்விகள் எழுகின்றனவோ, அவற்றின்

விடைகாண திங்கள் காலை 10மணிக்கு எல்லோரும் சந்திக்கலாம். கேள்விகளே எழவில்லை எனில், அதற்கடுத்த வாரம்வரை ஒத்திப்போடலாம்" என்பதுபோல். சமயங்களில் இந்த வழிகாட்டுதலுக்கு ஒரு புத்தகம் தேர்ந்தெடுக்கப்படுகிறது. இந்த உடன்படிக்கையில், மாணவர்கள் நிறைவெற்ற வேண்டிய கடமைகளும் உண்டு. உதாரணத்திற்கு, அவர்கள் நேரத்துக்கு வர ஒத்துக்கொள்வது.

ஒருசாரரேனும் முழுதாய் ஒப்பந்தத்தை நிறைவேற்றியபின் வகுப்பானது முற்றுப்பெற்றுவிடும். தங்களால் தரமுடியவில்லை என ஆசிரியர்களுக்குப் பிடிபட்டுவிட்டால், அவர்கள் விலகிக் கொள்ளலாம். அந்நிலையில், வகுப்பென்ற ஒன்று இன்னமும் வேண்டும் என மாணவர்கள் நினைத்தால், அவர்கள் வேறொரு புது ஆசிரியரைத் தேடவேண்டும். மாணவர்கள் மேலும் தொடர வேண்டாம் என கண்டுகொண்டுவிட்டால், வேலை நேரத்தில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள ஆசிரியர்கள் வேறொரு வழியைக் கண்டுபிடிக்க வேண்டும்.

அவ்வப்போது நிகழும் மற்றொரு வகையான வகுப்பும் பள்ளியில் உண்டு. ஏதேனும் ஒரு செய்தி சொல்வதற்குப் புதியதாகவும், தனித்துவம் வாய்ந்ததாகவும், புத்தகங்களில் நாம் பார்க்கமுடியாததாகவும், அதே சமயம் பிறரின் ஆர்வத்தைத் தூண்டும் என யாரேனும் நினைக்கும்போது இது நடக்கும். "இந்தத் தலைப்பில் விருப்பமுடைய யார்வேண்டுமானாலும், கருத்தாடல் அறையில் வியாழக்கிழமைகளில் காலை 10.30 மணிக்கு என்னை சந்திக்கலாம்" எனும்படியாய் அறிவிப்பை வெளியிடுவார்கள். பின்னர் காத்திருப்பார்கள்.

ஏதேனும் தலை தெரிந்தால், அவர்களின் நிகழ்ச்சி நடக்கும். இல்லையென்றால் இதுதான்டா வாழ்க்கை என போகவேண்டியதுதான். சிலர் முதல்முறை வரலாம்; அடுத்த

முறை என்ற ஒன்று இருக்குமானால், அதற்கு வரவேண்டாம் என்றும் அவர்கள் முடிவுசெய்யலாம்.

நானே பலமுறை இதுபோன்று செய்திருக்கிறேன். என்னதான் சொல்கிறார் பார்ப்போமே என்று முதல்முறை கூட்டம் சேரும். இரண்டாவது வகுப்பில், சிலரே வருவாரக்ள். கடைசியில், கையில் எடுத்துக்கொண்ட பொருள்பற்றி நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதைப் பற்றி உண்மையாகவே ஆவலுடன் அறிய வருபவர்கள் ஒரு கையளவே தேறுவார்கள். அவர்களுக்கு அது ஒருவகை பொழுதுபோக்கு. நம் உரத்த சிந்தனைப்போக்கை பிறர் அறிய அது எனக்கு (பிறருக்கும் கூட) ஒரு வழிவகை.

# 3

# உறுதிப்பாடு

வார்த்தைகளோடு மீண்டும் தொல்லைதான். நான் கற்றலைப் பற்றி தற்போது விவரித்த விதம், ஏதோ மேம்போக்காய், ஒழுங்கீனமாய், மெத்தனமாய் இருப்பதுபோல தொனிக்கிறது. வந்தால் வரட்டும், போனால் போகட்டும். வரைமுறையற்று, கட்டுப்பாடற்று. ஒழுங்கற்று.

உண்மையாகவே அப்படி இருக்கக்கூடாதா என பலமுறை நினைத்திருக்கிறேன்.

முதன்முதலில் பள்ளியை திறந்தபோது தன்னை பதிவு செய்து கொண்டான் பதின்மூன்று வயது ரிச்சர்ட். சாஸ்த்திரிய சங்கீதம் மற்றும் ட்ரம்பட் வாசிப்பதில் மூழ்கி, லயித்து தன்னை அதில் கலந்தான். தன் மெய் ஆர்வத்தைக் கண்டுகொண்டதைப் பற்றிய தெளிவு ரிச்சர்டிடம் கொஞ்ச காலத்தில் மலர்ந்தது. அவனுக்கு உதவக் கிடைத்த ஜேன் எனும் ட்ராம்பட் கருவி வாசிப்பாளரின் துணைகொண்டு ரிச்சர்ட் தன் பாடத்தில் மூழ்கினான்.

ஒருநாளில் பல மணிநேரம் ரிச்சர்ட் ட்ரம்பட் வாசித்துப் பழகினான். எங்களால் நம்பமுடியவில்லை. பிற செயல்பாடுகளையும் நாங்கள் பரிந்துரைத்தோம். ரிச்சர்ட் எதைச் செய்தாலும் - பள்ளியில் பலவற்றையும் செய்தான் - ட்ரம்பட் வாசிக்க நான்கு மணிநேரம் அவன் எப்படியோ கண்டுபிடித்துவிடுவான்.

அவன் தினமும் பாஸ்டனிலிருந்து ஒருவழிக்கே ஒன்றேகால் மணிநேரம் பயணித்து, ஃப்ராமிங்க்ஹம் பேருந்து நிலையத்திலிருந்து அவ்வப்போது அரைமணிநேரமோ அதற்கதிகமாகவோ நடந்தும் வந்தான். வானம் பொழிந்தாலும், வெயில் அடித்தாலும், பனி பெய்தாலும், ஆலங்கட்டி மழை விழுந்தாலும், கருமமே கண்ணாயினார் என்பது போல ரிச்சர்ட் பள்ளிக்குத் தவறாமல் வந்தான். எங்கள் செவிக்கும் இசையை தவறாமல் தந்தான்.

குட்டைக்கு அருகாமையில் இருந்த பழைய மாவரை அகத்தின் (mill house) நிலையை நாங்கள் கவனிக்க அதிககாலம் ஆகவில்லை. வளாகத்தின் தூரத்தே இருந்த ஒரு மூலையில் ஒடுங்கியிருந்த கட்டிடம் அது - கருங்கல்லால் கட்டப்பட்டது, ஸ்லேட் கல்லாலான கூரை வேயப்பட்டது. அந்தப் பழைய பாழடைந்த கட்டிடம் திடீரென்று எங்கள் கண்களுக்கு அழகாய்த் தெரிந்தது. ரிச்சர்டுக்கும்தான் அவன் தன் ஆசைதீர அங்கே சாதகம் செய்யும் வகையில் சடசடவென அது ஒரு மியூசிக் ஸ்டுடியோவாக மாற்றப்பட்டது.

அவன் சாதகம் செய்தான்.

நான்கு ஆண்டுகள், தினமும் நான்கு மணிநேரம் அல்லது அதற்கும் அதிகமாய்.

பள்ளியை முடித்த கொஞ்சகாலத்திற்குப் பின்னர் ஒரு இசைப்பள்ளியில் மேல்படிப்பு முடித்தபின், ரிச்சர்ட் ஒரு மேஜர் இசைக்குழுவின் முதன்மை ஹார்ன் கருவி வாசிப்பாளராய் திகழ்ந்தான்.

விரைவில் ரிச்சர்டை தொடர்ந்தவன் ஃபிரெட், அவனுடைய வேட்டலோ ட்ரம்ஸ் வாசிப்பது. காலையில் ட்ரம்ஸ், மதியம் ட்ரம்ஸ், இரவிலும் ட்ரம்ஸ். அடுத்தகட்ட நடவடிக்கை தயாராய் இருந்தது. அடித்தளத்தில் அவனுக்கான ட்ரம்ஸ் அறை

உருவானது. வார இறுதியிலோ, நாளின் முன்னோ, பின்னோ வேண்டும்போதெல்லாம் வாசிக்க வசதியாயிருக்க, அவனிடம் பள்ளியின் சாவி கொடுக்கப்பட்டது.

அடித்தளத்திலிருந்து வந்த ஓசை கட்டடத்தின் பிற பகுதிகளில் கேட்டது. பின்னனியில் சதா சர்வகாலமும் மேளத்தின் சப்தம் கேட்டுக்கொண்டிருந்தது. சமயத்தில் ஏதோ காட்டுவாசிக்கிராமத்துக்கு அருகில் வாழ்வதுபோலத் தோன்றியது.

இரண்டு வருடங்கள் கழித்து, ஃப்ரெட் பதினெட்டு வயதில் வெளியே சென்றான். நாங்கள் அவனை மனமார நேசித்தோம், ஆனால் பலரும் அவன் சடசடவென வளர்ந்து

நம் எல்லோரின் உள்ளிருக்கும் உறுதிப்பாட்டை வெளிக்கொணருவது இசைமட்டுமே கிடையாது. ஒவ்வொரு குழந்தையும் சீக்கிரத்தில் ஒன்றோ இரண்டோ அல்லது அதிகமான துறைகளையோ கண்டுபிடித்துவிடுகிறது, தொடர்ந்து விடாப்பிடியாய் முன்னேற.

சிலசமயங்களில் அவர்களுக்கு மகிழ்ச்சி என்பதுகூட இரண்டாம் பட்சமாகிறது. வருடாவருடம், கல்லூரியில் சேர்ந்துவிடவேண்டும் என்று மனதுவைத்த வளர்ந்த மாணவர்கள் SAT தேர்வெழுத தங்குதடையின்றி தாங்களே தங்களை உந்திக்கொள்கிறார்கள். SAT தேர்வு எழுத விழையும் குழந்தைகளின் திறனை அளக்கும் ‘பேர்போன’ aptitude சோதனைகளை எல்லா கல்லூரிகளும், அவர்களுக்கு உதவுகிறோம் பேர்வழி என்று இந்த வாய்ப்பை பிடித்துக் கொண்டு, சோதனைமேல் சோதனைகளை நடத்தி, அவர்கள் எங்கு சேர்வது என முடிவெடுப்பதை மேலும் சிரமமாக்குகிறார்கள். தங்களுக்கு சவாலாய் இருப்பவற்றை சமாளிக்க பள்ளி அங்கத்தினர் ஒருவரின் துணையை நாடுகிறார்கள். ஆனால் அதற்கான முழுஉழைப்பும் அவர்களுடையதே. தடியான

மீள்வாசிப்புப் (review) புத்தகங்கள் ஓர் அறையிலிருந்து மற்றொரு அறைக்கு இழுத்துச் செல்லப்படுகின்றன. விழுந்து விழுந்து படிக்கப்படுகின்றன, பக்கம் பக்கமாக விடைகள் காணப்படுகின்றன. இந்தச்செயல்முறை எல்லாக்காலத்திலுமே கடினமானதும்கூட. இந்தச் சவாலை ஆதியிலிருந்து அந்தம்வரை முடிக்க நான்கைந்து மாதங்களுக்குமேல் எடுத்துக்கொள்வதில்லை. பலரும் இந்தத் தேர்வுக்கான பயிற்சித்தொகுப்பைப் பார்ப்பது இதுதான் முதல்தடவை என்றாலும்கூட.

ஒவ்வொரு நாளும் மணிக்கணக்கில் அமர்ந்து எழுதும் எழுத்தாளர்கள் இருக்கிறார்கள். ஓவியம் தீட்டும் ஓவியர்கள், பானை, பானையாக வினைபவர்கள், சமையல் செய்யும் பரிசாரகர்கள், விளையாட்டு வீரர்கள் இருக்கிறார்கள்.

தினப்படி விவகாரங்களில் ஆர்வமுடையவர்கள் உள்ளனர். அதே சமயம் விந்தையான விஷயங்களில் ஆர்வம் செலுத்துபவர்களும் உண்டு.

இறுதி ஊர்வலம் நடத்துபவராக ஆகவேண்டும் என்பது ல்யூக்கின் விருப்பம். பதினைந்தே வயது நிரம்பியபோது உங்கள் யாருக்கும் இப்படியொரு ஆசை வந்திருக்காது. அவனுக்கான காரணங்கள் இருந்தன. தன் சமூகத்திற்குத் தேவையான ஆற்றுப்படுத்துதலை அவன் நிர்மாணிக்கப்போகும் இறுதி ஊர்வலக்கூடம் செய்வதைத் தன் மனக்கண்ணில் கண்டான். மேலும் தானே மனம்வருந்தும் சொந்தபந்தங்களைத் தேற்றுவதையும் கண்டான்.

முழுஈடுபாட்டோடு படிப்பில் மூழ்கினான் ல்யூக் : அறிவியல், வேதியியல், உயிரியியல், விலங்கியல். பதினாறு வயதில் வேலைக்குத் தயாரானான். நிஜ உலகுக்கு அவனை நாங்கள் இட்டுச்சென்றோம். வட்டார மருத்துவமனையின் தலைமை

நோய்நிபுணர ஆர்வமாய், கடினமாய் உழைக்கும் மாணவனைத் தன் சோதனைக் கூடத்திற்கு வரவேற்றார். நாளாக ஆக அவனுடைய உயரதிகாரி மகிழ்ச்சியடையும் விதத்தில் பல செயல்முறைகளைக் கற்றான், அவற்றில் தேர்ந்தான். ஒரே வருடத்தில் அவனுடைய வழிநடத்துபவரின் மேற்பார்வையில் மருத்துவமனையில் பிரேத அறுவைகள் செய்து கொண்டிருந்தான், யார் உதவியுமின்றி. மருத்துவமனை முதன் முறையாக இப்படி ஒன்றைப்பார்த்தது.

ஐந்து வருடங்களிலேயே ல்யூக் ஒரு பிரேத வல்லுனன் ஆனான். இப்போது, பலவருடங்களுக்குப் பின், அவனுடைய இறுதி ஊர்வலக்கூடம் மெய்ப்பட்டது.

அடுத்தது பாப்.

பாப் ஒருநாள் என்னிடம் வந்து “உங்களால் எனக்கு இயற்பியல் கற்பிக்க முடியுமா?” என்று கேட்டான். அவனைச் சந்தேகப்பட எந்தக் காரணமும் என்னிடம் இல்லை. பாப் ஏற்கனவே பலவற்றை மிகநன்றாய் செய்துமுடித்தவன். எல்லாவற்றையும் முழுமூச்சாய் கடைசிவரை முடிக்கும் திறன் பெற்றவன் அவன் என எங்கள் அனைவருக்கும் தெரியும். பள்ளி அச்சகத்தை நடத்தியிருக்கிறான். பள்ளியின் நீதிமுறை பற்றி முழுமையாய் ஆராய்ந்து ஒரு புத்தகம் எழுதியிருக்கிறான் (பதிப்பித்திருக்கிறான்). பியானோ வாசிக்கக் கற்பதில் பலமணி நேரங்களை கழித்திருக்கிறான்.

எனவே நான் உடனே ஒப்புக்கொண்டேன். எங்களுடைய ஒப்பந்தமோ எளிமையான ஒன்று.

நான் அவனிடம் கனமான, தடிமனான ஒரு கல்லூரிப் பாடப்புத்தகத்தைத் தந்தேன். அது இயற்பியலுக்கான ஒரு அறிமுகம். முன்பு அவ்வப்போது அந்தப் புத்தகத்திலிருந்து கற்பித்திருக்கிறேன். அதன் முந்தைய பதிப்பைக்கூட

பயன்படுத்தியிருக்கிறேன், நான் துவக்கநிலையில் இருக்கும்போது. எங்கெங்கு அது காலைவாரிவிடும் என்பதை நன்கு அறிந்திருந்தேன். “புத்தகத்தில் உள்ள ஒவ்வொரு பக்கமாக, ஒவ்வொரு பயிற்சிகேள்வியாக” முயன்றுபார் என பாபிடம் சொன்னேன். “சிறிது சங்கடம் வந்தால்கூட உடனே என்னிடம் வந்துவிடு,” என்றும். அவற்றை முளையிலேயே சரிசெய்து விடுவது நல்லது, பின்னால் பெரிய தடைக்கல்லாய் ஆகாமல் இருக்கும். பாப் முதலில் எங்கே இடறுவான் என எனக்கு நன்றாய்த் தெரியும் என நான் நினைத்திருந்தேன்.

வாரங்கள் ஓடின. மாதங்களும்.

பாபின் சுவடே காணோம்.

ஒன்றை வேண்டும் என பிடித்துக்கொண்டுவிட்டால், அதை விடமாட்டான் அவன். அவனா இது? ஒருவேளை அவனுடைய ஆர்வம் பிசுபிசுத்துவிட்டதா? என நான் வியந்தேன். வாயை மூடிக்கொண்டு காத்திருந்தேன் நான்.

துவங்கியதற்கப்புறம் 5 மாதங்கள் கழித்து வந்தான் பாப், என்னைப் பார்க்க வேண்டும் என்றான். “252வது பக்கத்தில் எனக்கு ஒரு சிக்கல் உள்ளது,” என்றான் அவன். என்னுடைய ஆச்சரியத்தை நான் வெளியே காட்டிக்கொள்ளவில்லை. அதைத் தெளிவுபடுத்த ஐந்தே நமிடங்கள்தான் பிடித்தது, அது மிகவும் சாதாரண சிக்கல்தான்.

இயற்பியல் தொடர்பாய் நான் பாபை மீண்டும் சந்திக்கவில்லை. அந்தப் புத்தகத்தை அவனாகவே முழுதும் முடித்துவிட்டான். என் உதவி எதையும் கோராமலேயே அவனாகவே இயல்கணிதம் மற்றும் நுண்கணிதத்தை முடித்துவிட்டான். அவனுக்கு தெரியும், கேட்டால் நான் உதவுவேன் என்றும்.

இன்று பாப் ஒரு கணிதன்.

# 4
# பயிற்சியாளன்

மருத்துவமனை நோய் ஆய்வாளரிடம் வேலைக்கு ல்யூக் சேர்ந்தபோது அவன்தான் சட்பரி வேலியின் முதல் அதிகாரப்பூர்வமான புறஇட பயிற்சியாளன்.

வளாகத்தில் பிணங்களை அறுத்து சோதனை செய்வதற்கான எந்த ஏற்பாட்டையும் ல்யூக்கிற்கு எங்களால் செய்துதர முடியவில்லை. எவ்வளவுதான் சிறப்பான சோதனைக்கூடம் அமைத்தாலும், மனிதச்சவங்களைக் கையாள்வது அங்கே கடினம்.

பதினைந்து வயதில் ல்யூக்கின் முன்னே இருந்த இரு பாதையில் ஒன்றையே அவன் எடுத்திருக்கமுடியும். ஒன்று ஆறேழு வருடங்கள் காத்திருந்து, கல்லூரி செல்லும் வயது வந்தபின் அங்கே நுழைந்து, படித்து முடித்து, பின்னர் தான் தேர்தெடுத்த துறையில் சென்றிருக்கலாம், அல்லது அப்போதே, தயாரான உடனே அதில் நுழைந்திருக்கலாம்.

அவன் காத்திருப்பதற்கான அவசியம் எதுவும் எங்களுக்குப் புலப்படவில்லை. நாங்கள் உள்ளூர் மருத்துவர்கள் பலரை சந்தித்தோம், எங்கள் தரப்பை விளக்கினோம், எங்கள் கண்ணோட்டத்தோடு ஒத்துப்போன ஒருவர் கிடைக்கும்வரை ஒவ்வொருவரையாக சந்தித்தோம். பள்ளியில் கற்பித்தல் ஒப்பந்தம் பேசுவது போலவே அவரிடமும் பேசினோம்: உங்களுக்கு உதவியாளனாக ல்யூக் கிடைப்பான், செலவின்றி - ஏனெனில் அவனுடைய கல்வியின் ஒரு பாகம் அது. பதிலுக்கு,

இன்னின்ன குறிப்பிட்ட பயிற்சிகளை அவனுக்கு நீங்கள் தருவீர்கள். பயிற்சிப் பட்டியல் தெளிவாய் போடப்பட்டது. சம்மந்தப்பட்ட ஒவ்வொருவரும் ஷரத்துக்களை ஒப்புக்கொண்டனர். பள்ளியின் முதல் பயிற்சிப்பணி (appreticeship) அரங்கேறியது.

உத்தி சூடுபிடித்தது. நாடகத்துறையில் ஜில்லுக்கு ஆர்வம் கூடியபோது, பள்ளியைத் தாண்டி பயணப்பட அவள் தயாராய் இருந்தாள். தயாரிப்புத்துறையே அவளுக்குக் கைவந்தது - ஒப்பனை, ஆடை ஆபரண வடிவமைப்பு, காட்சியமைப்பு, ஒளியமைப்பு. கேம்ப்ரிட்ஜின் லோயிப் த்யேட்டர் குழுவில் அவள் பயிற்சியில் ஈடுபட்டாள். கூடியவிரைவில் நாடு முழுக்க எல்லா தொழில்முறை நாடகக்குழுக்களும் உதவிக்கு அவளை நாடின. அவளுக்குக் கிடைத்த இந்தப் புதியவாய்ப்பால் கிடைத்த பணத்தைக்கொண்டு கல்லூரிப் படிப்பிற்கான கட்டணம் கட்டமுடிந்தது. அங்கே பெற்ற பட்டம் அவளின் வேலை வாய்ப்பை மேலும் வளமாக்கியது.

வளாகத்தில் எதுவரை தங்கலாம்? அறுதி உறுதியாய் முடிவுசொல்ல முடியாத ஒரு கடினமான கேள்வி இது. பதினான்கு வயதில், புகைப்படக்கலையில் தோய்ந்தான் ஸால். புகைப்படக்கூடத்தின் அரிச்சுவடியில் தேர பள்ளியின் இருட்டறையை பயன்படுத்திக்கொண்டான். கொஞ்சகாலத்தில் பள்ளி வசதி திருப்தியாயில்லை அவனுக்கு. வெளியே எங்காவது வழிகிடைக்குமா என பார்ப்பதற்கு பதில், இங்கே இருப்பதை மேம்படுத்த முடிவெடுத்தான். மெதுவாய், கஷ்டப்பட்டு, தச்சுவேலை கற்றுக்கொண்டான். தொழில்நுட்ப புகைப்படப் பத்திரிக்கைகள், கையேடுகள், வழிகாட்டிகளைப் படித்தான். ஒரு வருடகாலத்தில், புகைப்படக்கூடத்தை முழுதாய் உருமாற்றி கட்டமைத்தான். உபயோகிக்கப்பட்ட, பழைய உபகரணங்களை தேவைக்கு ஏற்றபடி வாங்கினான். பள்ளியில்

புகைப்படக்கலையால் ஈர்ப்பப்பட்ட நான்காவது மாணவன் அவன் என்பதாலும், இருட்டறையை சீரமைத்ததாலும் அது முடியும்தருவாயில் அந்த இடம் பேஷாய் இருந்தது.

அவன் பதினாறு வயதை எட்டியபோது, அதுவும் போதுமானதாயில்லை. அவனுக்கு ஒரு வல்லுனரின் கீழ் நேரடிபயிற்சி தேவைப்பட்டது. தன்னை பயிற்சியாளனாக ஏற்றுக்கொள்ளக்கூடிய வாணிபமுறை புகைப்படக் கலைஞரைத் தேடி பாஸ்டனைச் சுற்றி அலைந்தான் ஸால். வாரங்கள் உருண்டோடின. சொல்லிக்கொள்கிற மாதிரி எதுவும் நடக்கவில்லை. ‘கல்லூரியில் சேரு,” என்றார் ஒருவர். இன்னோருவரோ, ஒரு பெரிய புகைப்படச்சாலையில் வேலைக்குப் போ” என்றார்.

இப்படியே சென்றதில், தான் என்ன சொன்னால் என்ன பதில் வரும் என்று தெளிவாய் அவனுக்கு பிடிப்பட்டுவிட்டது. ஜோவை சந்திக்கும் தருவாயில், தன்னுடைய தேவையை எப்படி செப்பவேண்டும் எனும் புரிதல் அவனிடம் இருந்தது. மறுதலிப்புகள் ஒவ்வொன்றும் கிடப்பில் போடப்பட்டன. ஆனால் ஒரு சிறுவனுக்கு பயிற்சி அளிக்கும் சவாலை (risk) சந்திக்க ஜோ தயாராயில்லை. “நான் பதின்மவயதினரை கையாண்டிருக்கிறேன். அவர்கள் எல்லாம் பொறுப்பற்றவர்கள். நேரத்துக்கு வரமாட்டார்கள், சொதப்புவார்கள், வேலையை முடிக்காமல் இழுத்தடிப்பார்கள்”, என்றார். ஸாலோ விடாப்பிடியாய் இருந்தான். பள்ளி அவனுக்குப் பக்கபலமாய் இருந்தது, உறுதி தந்தது. வாரமிருமுறை, ஸால் பேருந்து ஏறி பாஸ்டன் சென்று ஜோவின்கீழ் பணிபுரிந்தான்.

புகைக்படக்கலையில் ஆன்னா ஆவன்னாவிலிருந்து ஆரம்பித்தான். வருட இறுதிக்குள் அவனுடைய பயிற்சியும்

முடிந்தது. ஜோவின் புகைப்படக்கூடத்தை அங்கேயே தங்கி நடத்தும்படி கேட்டுக்கொள்ளப்பட்டான் ஸால்.

இன்று ஸால் ஒரு கலை புகைப்படக்கலைஞன் (art photographer), வாணிபக் கண்ணோட்டத்தில் மிகவும் தேர்ந்த ஒரு தொழில்நுட்ப வினைஞன் ஸால்.

இதுவரை, ஒரே ஒரு பயிற்சிப்பணி தான் தோல்வியைத் தழுவியுள்ளது. பயிற்றுனர் மிகவும் பொறுப்பற்றவராய் திரிந்ததால், இந்த முடிவு நிகழ்ந்தது. கொஞ்ச காலத்தில், மாணவன் அதைவிடுத்து வேறிடம் நோக்கினான்.

இத்தனை வருடங்களில், எங்களின் பல பயிற்சியாளர்களுக்கு பயிற்சி தந்த ஒருவர் இருக்கிறார்.

ஆலன் வைட் ஒரு பொது ஒப்பந்தக்காரர் (general contractor) எங்கள் பள்ளியை துவக்கியபோது, அவர் பொதுப்பள்ளி ஒன்றின் தலைமை ஆசிரியர், நிர்வாகத் துறை ஏணியை படிப்படியாய் ஏறியவர். ஒரு வெற்றிகரமான நிர்வாகிக்குத் தேவையான அத்தனை திறன்களும் ஒருங்கே வரமாய்ப் பெற்றவர் ஆலன். தன் அறிவுத்திறனை, டாம்டாம் போட்டு தம்பட்டமிடாதவர். ரொம்பவும் நிதானமானவர், எப்போதும் தன்னிலை இழக்கமாட்டார். நியாயமானவரும்கூட. இனிமையானவர், ஒழுங்குமுறை உள்ளவர். காரணம் காரியத்தை புரிந்துகொள்பவர்.

நாங்கள் எங்கள் பள்ளியைத் திறந்தபோது, பாஸ்டன் மாநகர வட்டாரத்திலேயே, எங்களுடையே நேரடி அழைப்பிற்கு இணங்கியவர் அவர் ஒருவரே. நாங்கள் என்ன செய்கிறோம் என்பதைக் காண சம்மதித்த ஒரேயொரு பொதுப்பள்ளி நிர்வாகி அவர் மட்டுமே. ஆர்வம் மிக்கவர் அவர்.

அவருடைய ஆர்வம் அவரை இட்டுவந்தது.

உள்ளூர் பள்ளிகளின் மேலதிகாரியாக தற்போது விளங்கும் ஆலன் விரைவிலேயே பள்ளி சீர்திருத்தங்களில் தன்னை

முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டார். எங்கள் பள்ளியில் நடப்பதை அவர் அதிகம் நோக்கநோக்க, பொதுப்பள்ளிகளிலும் கொஞ்சமேனும் மாற்றங்களை கொண்டுவர அவர் மேலும்மேலும் முனைந்தார்.

வெடித்தெழுந்த சர்ச்சைகளால் அவருடைய ஊரே பிளவுபட்டது. அவருடைய மாதிரி பொதுப்பள்ளியும் எதிர்ப்பால் கொஞ்சகாலத்திலேயே இழுத்து மூடப்பட்டது. அந்த பள்ளிக்குச் சென்றவர்களும், அங்கே பணி செய்தவர்களும் பதினைந்து வருடங்கள் பிற்பாடு அதைப்பற்றி சிலாகித்துத் தங்கள் நினைவுகளைப் பகிர்ந்து அதைப் புகழ்ந்தது தனிக்கதை.

பொதுக்கல்வியை விட்டு விலகினார் ஆலன். தன்னுடைய பணிக்காலத்தை, வளர்ந்து வந்த தன்னுடைய ஓய்வூதியநலன்களை (retirement benefits), இதரப்படிகளை அவர் துறந்தார். தன்னுடைய பழைய காதலை நோக்கிப் பயணித்தார் - தச்சுவேலையை கையிலெடுத்தார். கொஞ்ச காலத்தில் அவர் ஒரு பொதுஒப்பந்தக்காரராக மாறினார்.

இத்தனை வருடங்களில், ஆலன் ஒருபோதும் எங்களின் கட்சியைவிட்டு விலகவில்லை. உதவ, அறிவுரை சொல்ல, சமாதானம் கூற என எப்போதும் எங்களுடன் இருந்தார் அவர். பள்ளி ஆட்சிக்குழுவின் தலைவராக ஒவ்வொரு ஆண்டும் மீண்டும் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார், முதல் ஆண்டிலிருந்தே.

பள்ளியில் யாராவது தச்சுத்தொழிலிலோ, கட்டடக் கலையிலோ ஆர்வம் காட்டினால், ஆலனின் பயிற்சிகளம் அவர்களுக்குக் கதவு திறந்தது. அவரிடம் பயின்ற நான்கு மாணவர்கள், தொழிலைக் கற்று, அதை வாழ்வாதாரமாக மாற்றினார்கள்.

கல்விப்பணியில் தொடர்ந்து பயிற்சியளிப்பதன் மூலம் தன்னை ஈடுபடுத்திக்கொள்ள ஆலனால் முடிந்தது. ஆர்வமும்

ஆற்றலும் பொங்கும், கற்கத் துடிக்கும் இளைஞர்களை வழிநடத்துவதில் உள்ள பெருங்களிப்பை, பலருக்கு அது தந்துள்ளது.

# 5

# வாசித்தலும் எழுதுதலும்

கிட்டத்தட்ட இருபதாண்டுகளில், ஸ்ட்பரி வேலியில் கற்றல் குறைபாடு சார்ந்த ஒரு நிகழ்வு கூட இல்லை. ஏனென்று சரியாக யாருக்கும் தெரியாது. கற்றல் குறைபாட்டின் காரணம், அதன் தன்மை, மெய்யாகவே நம் செயல்பாடுகளுக்குத் தடையாகும் விதத்திலான ஒரு குறைபாடா அது என்பதெல்லாம் பெரும் விவாதத்துக்குரிய கருப்பொருட்கள். மக்கள் தொகையில் ஏறக்குறைய 20% குற்றம்சாட்டப்பட்ட இந்தக் குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது சில அதிகாரிகளின் கூற்று.

உண்மை என்னவெனில், நாங்கள் அதைப் பள்ளியில் பார்த்ததே இல்லை. எப்படி வாசிப்பது எனக் கற்பதை நாங்கள் யாருக்கும் புகட்டாததால் ஒருவேளை அப்படியாகியிருக்கலாம்.

எங்களுடைய பெரிய சவாலே வாசித்தல்தான். நாங்கள் எல்லாவற்றிலும்போல, இதற்கும் குழந்தையிடமிருந்து முன்னெடுப்பு வரும் என விட்டுவிடுகிறோம். எங்களிடமிருந்து எந்தவொரு நமிண்டலும், உந்தலும் கிடையாது. “இப்போது வாசிக்கக் கற்றுக்கொள்” என யாரும் சொல்வதில்லை. “ஆமாம்... இப்போது நீ வாசிக்கக் கற்றுக்கொள்ள ஆசைப்படவில்லை?” எனும் கேள்வியை யாரும் கேட்பது கிடையாது. “இப்போது வாசிக்கக் கற்றுக்கொள்வது சரியான ஒன்று என உனக்குத் தோணவில்லையா?” என்று கோடு காண்பிப்பவரும் இல்லை. மேலும், “அட! வாசித்தல் எவ்வளவு மகிழ்வைத் தரும் ” எனும் பாணியில் பொய்யான உத்வேகத்தை வரவழைத்துக்கொண்டு

எங்கள் கருத்தை உள்ளடைப்பு செய்பவரும் கிடையாது. எங்கள் பதாகை இதுதான்: **மாணவன் முதல் அடி எடுத்து வைக்கும் வரை காத்திரு.**

எல்லோருக்கும் விருப்பமான முடிவுகள் வரும்போது, தங்களுடைய கொள்கைகளை தாங்கிப் பிடிப்பது சுலபம்தான். என் குடும்பத்தையே உதாரணத்துக்கு எடுத்துக்கொள்ளுங்கள். என்னுடைய முதல்குழந்தை ஐந்துவயதிலேயே வாசிப்பதில் ஆர்வம் காட்டினான். ஆறாம் வயதில் தானாகவே ஒரு வாசகனாய் உருப்பெற்றான். தொல்லையே கிடையாது. எல்லாமே “நன்றாய்” சென்றது.

அடுத்து எங்கள் மகள், மூத்தவனைவிட இரண்டரை ஆண்டுகள் இளையவள். பள்ளியில் எல்லாருக்கும்போல், இவளுக்காவும் காத்திருந்தோம் - வாசிக்க சொல்லித்தரும்படி கேட்பாள் அல்லது தானாகவே கற்பித்துக்கொள்வாள் என்றும் காத்துக்கொண்டிருந்தோம், காத்துக்கொண்டே இருந்தோம், மேலும் மேலும் காத்துக்கொண்டேதான் இருந்தோம்.

அவள் ஆறுவயதில் படிக்கவில்லை, பரவாயில்லை, உலகைப் பொருத்தவரை.

அவள் ஏழிலும் படிக்கவில்லை என்பது பலரின் கண்களை உறுத்தியது. தாத்தா பாட்டிகள், தெரிந்தவர்கள் என பலரும் கொஞ்சம் நெளிய ஆரம்பித்தார்கள். சமயம் கிடைக்கும்போது எங்களுக்கு சுட்டிக்காட்டவும் அவர்கள் தவறவில்லை.

அவள் எட்டிலும் படிக்கவில்லை என்பது உற்றார் உறவினரிடையே ஒரு பேச்சாய் போனது.

அவர்கள் பார்வையில் உதவாக்கரை பெற்றோராக நாங்கள் தெரிந்தோம். பள்ளி? அங்கே உள்ள குழந்தைகள் எட்டு வயதானபின்கூட படிக்கவில்லை, அவர்களை சீர்படுத்தும்

முயற்சியும் எதுவும் எடுக்கப்படவில்லை - இப்படிப்பட்ட பள்ளியெல்லாம் ஒரு பள்ளியா?

பள்ளியிலோ இதனை யாரும் கவனித்ததாகவோ கண்டுகொண்டதாகவோகூட தெரியவில்லை. எட்டுவயதான அவளுடைய நண்பர்கள் அனேகமாக எல்லோராலுமே வாசிக்கமுடிந்தது. சிலரால் முடியவில்லை. அவளுக்கே அதைப்பற்றி அக்கறையில்லை. பள்ளியில் அவளுடைய நாட்கள் ஆனந்தமாய்க் கழிந்தன.

அவள் ஒன்பதாம்வயதில் வாசிக்க வேண்டும் என முடிவெடுத்தாள். ஏன் அந்த முடிவை அப்போது எடுத்தாள் என்பது எனக்குத் தெரியாது. அவளுக்கும் அது பற்றிய நினைவில்லை. ஒன்பதரையில், அவள் ஒரு முழுமையான வாசகி. அவளால் எதையும் படிக்கமுடிந்தது. இப்போது, யாருக்கும் அவள் ஒரு 'தொல்லை' இல்லை. உண்மையில், எப்போதுமே அவள் ஒரு தொல்லை கிடையாது.

எங்களுடைய சொந்த அனுபவம் எங்களுக்கு மட்டுமே உரித்தானதொன்றும் கிடையாது. பள்ளியில், ஒருசில குழந்தைகள் சீக்கிரம் வாசிக்கும், சிலது மெதுவாய்த்தான், இறுதியாய் எல்லாருமே நன்றாகவே வாசிப்பார்கள் என்பதே நிஜம்.

மெல்லப் படிக்க ஆரம்பித்த சிலர் புத்தகப் புழுக்களாக மாறியுள்ளனர். சீக்கிரமே படிக்க ஆரம்பித்த சிலரோ, அதைக் கைவந்த கலையாக்கிக்கொண்டு, அப்புறம் புத்தகங்கள் பக்கமே தலைவைக்காத கதைகளும் உண்டு.

மழலையர் வாசிப்பதற்கான புத்தகம் ஒன்றுகூட எங்களிடம் பள்ளியில் கிடையாது. முதல், இரண்டாம், மூன்றாம் வகுப்புகளுக்கான அறிமுகப் புத்தகங்களும் கிடையாது. தொழில் முறை ஆசிரியர்களைத் தவிர, பெரியவர்கள் எத்தனைபேர்

மழலையர் புத்தகங்களை கவனித்திருப்பார்கள் தெரியவில்லை. அவை வெறுமையாக, தொடர்பற்று, சலிப்பு தருபவையாக இருப்பவை. இன்றைய குழந்தைகளுக்கு, தொலைக்காட்சிப் பெட்டியுடன் வளர்ந்தவர்களுக்கு, சாமர்த்தியமான அவர்களுக்கு இந்தப் புத்தகங்கள் முட்டாள்தனமாக இருப்பதாகவே தோன்றும். என்னால் ஒன்றை நிச்சயமாகச் சொல்லமுடியும் எந்த ஒரு குழந்தையும் மகிழ்ச்சி பெறவேண்டி புத்தகம் படிப்பதைநான் பார்த்ததில்லை.

உண்மையில் வாசிப்பதைப் பற்றி பள்ளியில் ரொம்பவும் யாரும் அலட்டிக்கொள்வதில்லை. வாசிக்கக் கற்கவேண்டும் என முடிவெடுத்தபின் ஒருசில குழந்தைகளே உதவியை நாடுகிறார்கள். ஒவ்வொரு குழந்தையும் தனக்கென ஒரு வழியை வகுத்துக்கொள்கிறது என நினைக்கிறேன்.

பிறரை வாசிக்கச்சொல்லி, அதை மனதில் பிடித்துக்கொண்டு, பின் தாங்களே ஒருவழியாய் அவற்றை வாசிக்கிறார்கள். மளிகை சாமான் பட்டியலை படித்துப்படித்து வாசிக்கக் கற்பவர்களும் உண்டு. விளையாட்டுப் பொருளோடு வரும் பயன்பாட்டுக் கையேட்டை படித்தும் கற்கிறார்கள் சிலர். தெருவில் உள்ள வழிகாட்டும் பலகைகூட சிலருக்கு வாசிக்க ஒருவழி. எழுத்துகளின் ஒலிகளை கற்பித்துக்கொள்கிறார்கள் சிலர். ஒரு சிலரோ பதங்களின் ஒலிகளை, மேலும் சிலரோ முழு வார்த்தைகளை. உண்மையைச் சொல்லவேண்டும் என்றால், இதை எப்படி அவர்கள் செய்கிறார்கள் என்பது எங்களுக்குத் தெரியாது, அவர்களும் பிரஸ்தாபிப்பதில்லை. அப்போதுதான் வாசகனாய் மாறியிருந்த ஒரு குழந்தையை, “நீ எப்படி வாசிக்கக் கற்றாய்” என ஒருநாள் கேட்டேன். அவனுடைய பதில் இதோ, “அதுவா, ரொம்பவே எளிது. ***உள்ளே***வைக் கற்றேன்.

***வெளியே***வைக் கற்றேன். அப்புறம் நானாக படிக்கமுடியும் என்பது புரிந்து விட்டதே.”

குழந்தைகளை பொருத்தமட்டும், வாசித்தல் என்பது பேசுவதுபோல, என்று எனக்குத் தோன்றுகிறது. சமூகம் பேசுதல் வகுப்பில் குழந்தைகளை சேர்ப்பதில்லையே. (பள்ளிகள் அவர்களை பிடித்துக்கொள்ளும் முன்பே அவர்கள் பேசக் கற்றுக்கொண்டு விடுவதால்தான் ஒருவேளை இவ்வாறிருக்கிறது. ஒருவேளை ஒரு வயதிலேயே குழந்தைகள் பள்ளி சென்றால், அப்புறம் பேச்சு வகுப்புகளும் வந்துவிடும் என்றே நான் நினைக்கிறேன். கூடவே, புதிதாய் கண்டுபிடிக்கப்படும் பேச்சுக் குறைபாடுகள் பட்டியலும் தயாராய் வரும்.) மிகச் சில துரதிருஷ்ட குழந்தைகள் பேச்சுக் குறைபாடுகளால் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு உதவி தேவை. அறுதிப் பெரும்பான்மையினர் எப்படியோ, யாருக்கும் தெரியாது. பேசுவதற்குத் தாங்களே தங்களுக்கு எப்படி என்று சொல்லிக் கொடுத்துக்கொள்கிறார்கள்.

குழந்தைகள் ஏன் பேசக் கற்கிறார்கள்? பேசுதல் மூலம் தகவல் பரிமாறும் மனித உலகத்தால் பச்சிளங் குழந்தைகள் சூழப்பட்டுள்ளதே இதற்கான காரணம். அந்த உலகத்தை வெல்வதைத் தவிர குழந்தைகளுக்கு வேறொன்றும் பெரிது கிடையாது. அவர்களை முடிந்தால் நிறுத்தித்தான் பாருங்களேன்! பேசுவது எப்படி எனக் கற்கும் ஒரு குழந்தையின் போராட்டம் மனஉறுதியையும், விடாமுயற்சியையும் செப்பும் காவியம்.

ஸட்பரி வேலியில் வாசித்தலுக்கும் இதுவேதான் நிகழ்கிறது. குழந்தைகளை அவர்கள் போக்கில் விட்டுவிடும்போது, அவர்களே கண்கூடாகக் காண்கிறார்கள். இந்த உலகத்தில், அறிவுப் பெட்டகத்தின் மாயத்திறவுகோல் எழுதப்பட்ட வார்த்தைகள் என்று. அவர்களுடைய முனைப்பு

அந்தச் சாவி வேண்டும் என்று அவர்களை இட்டுச் செல்லும்போது, அவர்களும் அதன் பின்னே செல்கிறார்கள். பிற செயல்களில் அவர்கள் காட்டும் அதே வீரியத்தோடு வாசிக்கக் கற்கவும் முனைகிறார்கள்.

பேசுவது எப்படி எனக் கற்பதைவிட அவர்களுக்கு இது ரொம்பவே எளிது. புதியவற்றைக் கற்க அவர்களுக்கு முன்பைவிட இப்போது வயதும் அனுபவமும் அதிகம். மொழி என்றால் என்ன, அது எவ்வாறு செயல்படுகிறது, வார்த்தைகள் என்றால் என்ன என்பதெல்லாம் அவர்களுக்குத் தெரியுமே. பேசுவதற்குத் தேவைப்பட்ட காலம், முயற்சி ஆகியவற்றில் சிறு பகுதியே வாசிக்கக் கற்பதற்கு அவர்களுக்குப் போதுமானது.

எழுதுதல் என்பது கொஞ்சம் வேறுபட்டது, வித்தியாசமானது.

குழந்தைகள் பலர் எழுத விரும்புகிறார்கள். அழகாக எழுதவும் விரும்புகிறார்கள். அழகுணர்ச்சியின் வெளிப்பாடு அது. அழகாக எழுதும் கலையைப் பயில அவர்கள் யாரிடமாவது செல்கிறார்கள். ஓவியம், பூத்தையல் (embroidery) போன்றவற்றைப் போலத்தான் இதுவும்.

எழுதுவதை அழகியலின் வெளிப்பாடாய்க் கண்ணுறும்போது, சில சமயங்களில் விந்தைகள் நிகழ்வதுண்டு. மிக அழகான எழுத்துருவம் கைவரப் பயில்வதற்கு சிறு குழந்தைகள் பலமணிநேரங்கள் பயிற்சி செய்வது ஒன்றும் அரிது கிடையாது. ஆனால் அதில் பாதிப்பேருக்கு வாசிப்பது எப்படி என்பதே தெரியாது எனும்போது அது விந்தைதானே!

“உங்களுக்குதான் படிக்கவே தெரியாதே, பின் ஏன் எழுத்துருக்கலையைக் கற்கிறீர்கள்?” என அவ்வப்போது நான் கேட்டிருக்கிறேன்.

“ஏனென்றால், அது அழகாய் உள்ளது,” என்பதுதான் கிடைக்கும் பதில்

சில குழந்தைகள் எழுதுவதை ஒரு கலையாகக் கற்கிறார்கள். பின் வேறொன்றுக்குப் போகிறார்கள், பின் அதை மறந்தும் போகிறார்கள். ஒரு சில ஆண்டுகுள் கழித்து, வாசிக்கக் கற்கிறார்கள். திரும்பவும் முதலிலிருந்து எழுதக் கற்கிறார்கள்.

எனக்கென்னவோ, அது திரும்பத் திரும்பச் செய்யத் தகுதியானதுதான் எனத் தோன்றுகிறது. சட்பரி வேலியில் ஒரே ஒரு குழந்தைகூட வாசிக்கக் கற்பதற்கு உந்தப்படவில்லை, தள்ளப்படவில்லை, துரிதப்படுத்தப்படவில்லை, நைசியப்படுத்தப் படவில்லை, அல்லது கையூட்டப்படவில்லை. கற்றல் குறைபாடு யாருக்கும் இருக்கவும் இல்லை. எங்களிடம் பயின்றுமுடித்துத் தேறியவர்கள் எவரும் எழுதப்படிக்கத் தெரியாதவராய் ஆகிவிடவில்லை - முழுதாயோ, அல்லது செயல்பாட்டளவிலோ. எட்டு வயதினரில் சிலர் எழுதப்படிக்கத் திணரலாம். பத்து வயதிலும் சிலர் திணராலம். அத்தி பூத்தாற்போல் பன்னிரெண்டு வயதுக் குழந்தைகூட திணரலாம். ஆனால், எங்களிடமிருந்து விடைபெறும்போது அவர்களிடையே எந்த வித்தியாசமும் தென்படாது. பின்னாட்களில் எங்களின் பழைய மாணவர்களை சந்திக்கும் எவரும் அந்த மாணவர் எந்த வயதில் முதன்முதலில் வாசிக்கவோ எழுதவோ கற்கத் துவங்கினார் என்பதை ஊகிக்க முடியாது.

# 6
# மீன் பிடித்தல்

வருடாவருடம், ஜூன் மாத துவக்கத்தில் தன்னுடைய மகனைப்பற்றி என்னுடன் கலந்துரையாட ஜான் வருவது வழக்கம். ஜான் ஒரு மென்மையான புத்திசாலி மனிதர். பள்ளிக்கு வந்துகொண்டிருந்த அவரின் மகன் டேனை அரவணைத்துத் துணை புரிந்தார் அவர்.

ஆனால் ஜான் கொஞ்சம் மனக்கலக்கத்துடன் இருந்தார். கொஞ்சம்தான் கலங்கியிருந்தார். வந்து உறுதிப்படுத்திக் கொள்ளும் அளவிற்குதான்.

எங்களின் பேச்சு இந்த தொனியில்தான் போகும்.

ஜான் : பள்ளியின் கொள்கைத் தத்துவம் எனக்குத் தெரியும், புரியவும் புரிகிறது. ஆனாலும் நான் உங்களுடன் பேசியே ஆகவேண்டும். கொஞ்சம் பதட்டமாய் உள்ளது.

நான் : என்ன விஷயம்? சொல்லுங்கள். (எனக்கு என்னவென்று நன்றாகவே தெரியும். இருவருக்குமே தெரியும்தான். என்றாலும் இது ஒரு சம்பிரதாயத்துக்கு. ஏனெனில் நாங்கள் இருவருமே அதையே மீண்டும் மீண்டும் சொல்லிக்கொண்டிருக்கிறோம் - தொடர்ந்து ஐந்து வருடங்களாக)

ஜான்: நாள் முழுவதும் பள்ளியில் டேன் செய்வதெல்லாம் மீன்பிடித்தல் மட்டுமே.

நான் : அதனால் என்ன ஆயிற்று?

ஜான்: நாள் முழுதும், தினந்தோறும், மழை, வெயில், காற்று, பனி என்ன வானாலும் எப்போதும், அவன் செய்வதெல்லாம் மீன்பிடித்தல் ஒன்றுதான்.

நான் : அவரை நேராய் நோக்குவேன், அடுத்த வரிக்காக அமைதியாய் காத்திருப்பேன். என்னுடைய சங்கேதக் குறிப்பு அதுதான்.

ஜான் : அவன் எதையுமே பயிலாமல் விட்டுவிடுவானோ என பயப்படுகிறேன். திடீரென்று ஒருநாள் தான் வளர்ந்துவிட்டோம் என அவனுக்கு புரியும், அப்போது அவனுக்கு ஒன்றுமே தெரியாமல் போய்விட்டால்.

இந்த விநாடி என்னுடைய சின்ன விரிவுரை நிகழும், அவர் வந்ததே அதனைக் காதால் கேட்டுப்போவதற்குத் தானே. அதெல்லாம் பரவாயில்லை என நான் ஆரம்பிப்பேன். டேன் நிறையவே கற்றுக்கொண்டுள்ளான். எல்லாவற்றையும்விட, அவர் மீன் பிடித்தலில் கைதேர்ந்திருக்கிறான். மீன்களைப் பற்றி நிறைய, ஏகப்பட்டது தெரிந்து வைத்துள்ளான். அவற்றின் வகைகள், அவற்றின் இருப்பிடங்கள், அவற்றின் குணாதிசயம், அவற்றின் உயிரியல், அவற்றின் விருப்பு வெறுப்புகள், எனக்குத் தெரிந்த யாரைக்காட்டிலும் அவனுக்கு அதிகம் தெரியும், அவன் வயதை ஒத்த எவரையும்விட நிச்சயம் அவனுக்கு நிறைய தெரியும். அவன் மிகச்சிறந்த மீனவனாக வருவானோ, என்னமோ, அவன் பெரியவனாகி, அடுத்த ***மீனவ நண்பன்***ஐ எழுதக்கூடும்.

சொற்பொழிவின் இந்தப் பகுதியை நான் அடைந்ததும், ஜான் சிறிது சங்கடப்படுவார். தனக்கு எல்லாம் தெரியும் என்ற திமிர் அவரிடம் நிச்சயம் கிடையாது. இருந்தாலும் அவருடைய மகன் மீன் பிடித்தலில் பிறரை வழிநடத்தும் அளவு மேதமை பெறுவான் எனும்படியான கற்பனை ஏனோ நம்பும்படியாய் இல்லை. நானோ, என் போக்கிலேயே பேசிக்கொண்டிருப்பேன்.

டேன் இன்ன பிறவற்றை கற்றுக்கொண்டுள்ளான் என்பதே நான் அதிகமாய் அவருக்கும் கூறவரும் செய்தி. ஒரு விஷயத்தை நழுவவிடாமல் எப்படி தக்கவைத்துப்பற்றிக்கொள்வது என்பதை கற்றுள்ளான். எவ்வளவு ஆழமாய் விரும்புகிறானோ, அவ்வளவு ஆழமாய், அது இட்டுச்செல்லும் பாதையில் தேடித்தேடி, தன்னுடைய மெய்யான ஆர்வத்தைப் பின்தொடர்ந்து, அவ்வாறு தொடர்வதற்கு ஏதுவாய் உள்ள சுதந்திரத்தை மதித்து நிடக்க அவன் கற்றுக்கொண்டிருக்கிறான். மேலும் மகிழ்ச்சியாய் இருப்பது எப்படி என அவன் கற்றுக்கொண்டிருக்கிறான்.

சொல்லப்போனால், பள்ளியிலேயே மகிழ்ச்சியான குழந்தை டேன்தான். அவனுடைய முகம் எப்போதும் சிரிப்பால் மலர்ந்திருக்கும், அவனுடைய மனதும்தான். ஒவ்வொருவரும், சிறியவர், பெரியவர், ஆண்கள், பெண்கள் எல்லோரும் டேனை நேசித்தார்கள்.

என்னுடைய உரை முடிவுக்கு வந்தது. “யாரும் இவற்றை அவனிடமிருந்து பறித்துவிட முடியாது”, என்றேன் நான்.

‘‘என்றோ ஒருநாள், ஏதேனும் ஒரு வருடம், அவனுக்கு மீன் பிடித்தலில் நாட்டம் குறையுமானால், அதே உழைப்பை அவன் வேறு ஒரு ஈடுபாட்டில் செலுத்துவான். கவலைப்படாதீர்கள்”

ஜான் எழுந்து, இதமாய் நன்றி கூறி, விடைபெறுவார். அடுத்த வருடம் துவங்கும்வரை. அவரின் மனைவி டான் அவரோடு வந்ததே இல்லை. சட்பரி வேலியைப் பற்றி அவர் மகிழ்வாய் இருந்தார். முகத்தில் மகிழ்ச்சி வீசும் மகன் இருக்கும்போது வேறென்ன வேண்டும்.

பின்பு ஒருவருடம் எங்களின் கலந்துரையாடலுக்கு நான் வரவிலலை. மீன் பிடித்தலை டேன் நிறுத்திவிட்டான்.

பதினைந்தாம் வயதில், கணினிமேல் காதல் கொண்டான். பதினாறில், உள்ளூர் நிறுவனம் ஒன்றில் சேவை விற்பன்னராய் வேலை செய்துக்கொண்டிருந்தான்.

பதினேழு வயதிற்குள், அவனும் அவனுடைய இரண்டு நண்பர்களும் சேர்ந்து ஒரு கணினி விற்பனை மற்றும் பழுதுநீக்கும் சேவை நிறுவனத்தை சொந்தமாய் நிறுவியிருந்தார்கள், அது வெற்றிக்கொடிகட்டியது. பதினெட்டுக்குள் பள்ளியை முடித்து கணினி கற்க கல்லூரியில் சேர்ந்திருந்தான். கட்டணத்திற்கும், இதர செலவிற்கும் தேவையான பணத்தை அவன் அவனின் கல்லூரிக்காலம் முழுதும் சேமித்து வைத்திருந்தான். ஹனிவெல்லின் முக்கிய வல்லுனனாகப் பணியிலிருந்தான், பணி செய்தான்.

அவனுடைய பல ஆண்டுகால மீன்பிடித்தலில் கற்ற எதையுமே மறக்கவில்லை டேன்.

மீன் பிடித்தலின் அழகைப் பற்றியும் அதிசயங்கள் பற்றியும் பலரும் பக்கம் பக்கமாய் எழுதியுள்ளார்கள். பள்ளியில் நாங்கள் இதை கண்கூடாகப் பார்த்தோம். குழந்தைகள் மீன்பிடித்தலை மிகவும் விரும்புகிறார்கள். அது ஆசுவாசப்படுத்துவது சவாலானதும் கூட. வெயிலோ, மழையோ, வெட்ட வெளியில் செய்யவேண்டிய ஒன்று பள்ளியில் நீர்நிலையின் கரையில் நின்றுகொண்டு, சலசலக்கும் மரங்களால், கண்களுக்கு மட்டும் சாம்பல் வண்ண கருங்கல் கட்டிடங்களால், நீர்தேக்கத்தின் கீழ் சில்லெனப் பாயும் நீரோடையால் நீங்கள் சூழப்படுவீர்கள். மீன்பிடிக்கும் பெரும்பாலான குழந்தைகள் இந்த அழகைக் காண்கிறார்கள். அவர்கள் அனைவரும் அதை உணருகிறார்கள்.

மீன் பிடித்தல் நம்மைப் பிறரோடு இணைக்கும். அவர்கள் நண்பர்களோடு மீன்பிடிக்கிறார்கள் அல்லது மூத்தவர்களிடம் கற்கிறார்கள் தூண்டில் போடத் திணறும் ஐந்தாறு வயதே ஆன

புதியபுதிய தலைமுறையை ஒவ்வொரு ஆண்டும் நாங்கள் காண்கிறோம்.

மீன்பிடித்தல் நம்மை பிறரிடமிருந்து விலக்கியும் வைக்கும். நீங்கள் விரும்பினால் தனியாய் இருக்கலாம். யாரும் தொந்தரவு செய்யமாட்டார்கள். அதுதான் நியதி. அவ்வப்போது, யாராவது தூண்டிலோடு நாளைக்கழிக்கப் புறப்படுவதும் உண்டு - தனிமையில் திளைக்க சிந்திக்க, தியானிக்க.

பள்ளி வாழ்க்கையில் மீன்பிடித்தல் ஒரு மிக முக்கியமான பகுதி. நீர்நிலையோடு கூடிய வளாகம் ஒன்று அமைய நாங்கள் எவ்வளவு கொடுத்து வைத்துள்ளோம் என்பதை எண்ணி அவ்வப்போது வியந்திருக்கிறேன்.

பள்ளியின் ஆரம்ப நாட்களில் ஏற்பட்டது டேன் ஜானுடனான என்னுடைய அனுபவம். பள்ளியைப் பற்றி, பள்ளி என்றால் என்ன என்பதைச் சிந்திக்கத் தூண்டியது இது. இதனாலேயே என் இளையமகன் நாள்முழுக்க மீன்பிடிக்கத் தொடங்கியபோது, நான் முழுக்கவே பதட்டமற்று இருந்தேன். கனவு நிஜமானதைப் போல உணர்ந்தேன்.

மேலும், தான் செய்வது இன்னதென அறிந்தவன் அவன் என்பது எனக்குத் தெரியும்.

# 7

# நோவாவின் கப்பல்

குதிரைக் கொட்டகைகளும் ஒரு பண்ணைவீடும் சேர்ந்த கட்டிடங்களை பள்ளிக்காக வாங்கியது சாலச் சிறந்தது, ஒரு பலம் என்றே நாங்கள் நினைத்திருந்தோம். ஆழகானவை அவை, விலங்கு வளர்ப்புக்கு ஏற்றால்போல் அமைந்திருந்தன.

குழந்தைத்தனமாகவே அது ஆரம்பித்தது. குதிரைஏற்றப் பெண்மணி மோலி இந்தப் பக்கத்தில் கொஞ்சம் பிரபலமானவர். எங்கள் கொட்டகையை பயன்படுத்தி குதிரை ஏற்றம் கற்றுத்தரலாமா எனக் கேட்டார். நாங்கள் கொஞ்சமும் தயங்கவில்லை. ஒரு அர்த்தமுள்ள உடன்படிக்கைக்கு ஒத்துவர மணிக்கணக் கி ல் பேச்சுவார்த்தை நடத்தவேண்டியதாய் இருந்தது.

1968ம் ஆண்டு ஜூலை முதல் நாள் பள்ளி திறந்தபோது, சற்றே அதிகமான கட்டணத்தில் எங்களால் குதிரை ஏற்ற வகுப்புகளைத் தரமுடிந்தது.

ஜூலை இரண்டாம் நாள், நாங்கள் கண்டுபிடித்தது என்னவென்றால் - அந்த பண்ணை வீட்டிற்கு மூட்டை முடிச்சோடு மோலி குடிபெயர்ந்திருக்கிறார் என்று. அவருக்கு வாழ வேறிடம் இல்லை! அங்கு குளியலறையோ சமையலறையோ கிடையாதே என்பது உறைத்தபோது, எங்களுக்குச் சந்தேகம் எழுந்தது.

குதிரைகள் கொட்டகையில் நிறுத்தப்பட்டிருந்தன. அவற்றைத் தூய்மையாக வைத்திருக்க எந்த ஒரு நடவடிக்கையும் இல்லை. நாளுக்கு நாள் கொட்டகை சுவற்றை ஒட்டி மலைபோல அவற்றின்

சாணம் குவிந்தது. அது தவறு மட்டும் அல்ல. அது சுகாதார மற்றும் தீயணைப்பு விதிமுறைகளுக்கும் இது எதிரானது.

ஆரம்ப நாட்களில், எங்களின் கவலைப்பட்டியலில் இதற்குப் பெரிதாய் இடம் தரவில்லை. பெரும்பாலான குழந்தைகளுக்கு ஒரு குதிரைக்கும் நீர்யானைக்குமான வித்தியாசம் கூட தெரியாது. மோலிக்கு வருமானம் போதுமானதாய் இல்லை, கொஞ்ச காலத்தில் அங்கிருந்து சென்றுவிட்டார்.

ஆனால் அவள் விட்டுச்சென்ற பாரம்பரியம் தொடர்ந்தது.

“நாங்கள் ஆடுகளை கொட்டகையிலும் பண்ணையிலும் வளர்க்க விரும்புகிறோம்” என்றனர் வில்ஸன் கண்மணிகள். முடிவுகள் எடுக்கும் பள்ளிக்கூடுகையில் அவர்கள் தங்கள் பக்க நியாயத்தை வலுவாய் வாதிட்டனர். முடிந்த அளவு அத்தனை எதிர்ப்புகளையும் நாங்கள் யோசித்தோம்.

“வாரயிறுதியிலும், விடுமுறையின் போதும் அவற்றை நீங்கள் பராமரிக்க வேண்டியதாய் இருக்குமே” என்றோம் நாங்கள்.

“அதனால் என்ன?” என்றார்கள். அவர்கள் நால்வர் - 3 பையன்களும் ஒரு பெண்ணும், அவர்கள் வேலைகளைப் பகிர்ந்துகொள்வார்கள்.

“உங்களுக்கு ஆடுகள் வளர்ப்பது பற்றித் தெரியாது”, எங்கள் வாதம்.

“உண்மை இல்லை! நாங்கள் இதுபற்றி வாசித்திருக்கிறோம், மேலும் பிறருடைய ஆடுகளை வளர்க்கவும் நாங்கள் உதவியிருக்கிறோம். இப்போது எங்களுடையதை வளர்க்க கற்றுக்கொள்ளப்போகிறோம். எங்கள் அம்மா உதவுவார்கள்”. அந்த அம்மா எங்கள் பள்ளியில் ஓர் ஆசிரியை.

‘சரி’ எனப் பட்டது, ஒரு நியாயமான கற்றல் கோரிக்கைதானே. கற்றல் நடந்ததா என்ற கேள்விக்கே இடமில்லை.

கூடவே பலவும் நடந்தன. ஆரம்பவகுப்புக் குழந்தைகளுக்கு எங்கள் அழகிய திடலை பயன்படுத்துவது ரொம்பவே கடினமாக ஆயிற்று, ஏனெனில் ஆடுகள் எல்லா இடங்களிலும் புழுக்கையிட்டன. வில்ஸன் கண்மணிகளில் யாரேனும் ஒருவரோ, அல்லது அவர்கள் தங்களிடம் ஈர்த்த பல உதவியாளர்களுள் ஒருவரோ ஆடுகளை மேய்ச்சலுக்கு கூட்டிப்போன ஒவ்வொரு தடவையும், அந்த சுட்டி வாண்டுகள், குட்டி ஆடுகள் வெளிப்படையான தடமொன்றை விட்டுச்சென்றன.

நாற்றம் சுத்தமாகக் கிடையாது, நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். அதற்காக அதன்மேல் உட்கார்ந்து கொண்டு கதையளக்க யாரும் விரும்பமுடியாதே.

அவ்வப்போது அவை ஓடிப்போய்விடும். ஆடுகள் உயிர்ப்பானவை, நளினமானவை, விடாப்பிடியானவை. எப்படியோ, வாரம் ஒருமுறையாவது தப்பித்துவிடும். இப்போது நான் யோசித்துப் பார்க்கும் போது, ஒவ்வொரு முறையும் நிஜமாகவே அது தற்செயலாக நடந்ததுதானா என உறுதியாய் சொல்ல முடியவில்லை. 'ஆடுதப்பித்தல்கள்' பள்ளியில் குதூகலமான குழப்பத்தை உண்டாக்கின. அவற்றைப் பிடிப்பதற்கு உதவ எல்லாரும் ஓடினார்கள், இல்லை பிறர் பிடிப்பதை காண்பதற்காவது ஓடினார்கள். கூச்சல், ஓட்டம், கத்தல்களின் நடுவே வேலையும் முடிந்திருக்கும். சமயத்தில் அக்கம்பக்கத்து சொத்துகளையும் இது விட்டபாடில்லை. எங்களுடைய பிம்பத்தை இது உயர்த்தியபாடாய் தெரியவில்லை.

காலப்போக்கில் வில்ஸன் கண்மணிகளுக்கு ஆடுகள் வளர்ப்பில் சலிப்பு தட்டியது, எங்கள் அத்தனை பேருக்கும் சலித்துபோய் ரொம்ப காலத்துக்கு அப்புறம்தான்.

ஆடு போய், முயல் வந்தது டும்டும்டும்.

“வணிக ரீதியில் முயல் வளர்ப்பு பற்றி கற்றுக்கொள்ள வேண்டும்” எனச் சொன்னார்கள் அவர்கள். இந்த முறை மூன்று வில்ஸன் பையன்களும் அவர்களின் நண்பன் ஆந்டியும். வில்ஸன் கும்பல் - என்றே அவர்கள் அழைக்கப்பட்டார்கள்.

எங்களின் பழைய எதிர்ப்புகளை எல்லாம் வலுவிழந்து அவிழ்த்துவிட்டோம் நாங்கள். ஒரு பலனும் இல்லை. நாங்கள் உதைபட்டதுதான் மிச்சம்.

விலங்குகளைப் பேணத் தெரியும் என்பதை அவர்கள் ஏற்கனவே நிறுபித்துவிட்டார்கள்.

முயல்களை கூண்டுக்குள் அடைக்கலாம் - தப்பித்து ஓடப்போவதில்லை - எங்களுக்கும் சர்வ நிச்சயமாய்த் தெரியும் ஒரு ஓட்டமும் இருக்காது என்று. ஏனென்றால் முயலை திரும்பப் பிடித்து வருவதுதென்பது சாத்தியம் கிடையாதே.

பண்ணைவீடு முயல்வீடாக மாற்றப்பட்டது. வில்ஸன் கும்பலுக்கு முயல்கள்மேல் சலிப்புதட்டும்வரைக்கும்.

விலங்குகளின்மேல் மாணவர்களுக்கு இருந்த பற்று சவாலான நிகழ்வுகளுக்கு வழி வகுத்துள்ளன. எழுபத்தைந்தாம் ஆண்டின் பெரும்பனிப்புயல் நாளில் நடந்ததைப்போல. பயணிக்க முடியாத சாலைகள். பள்ளிகளும், கடைகளும் முடப்பட்டிருந்தன. விலங்குளைப் பராமரிக்க கொட்டகைக்கு க்ரிஸ் மற்றும் ஆமியைக் கூட்டிச் செல்வது என்பதை நினைத்துப் பார்க்கக்கூட முடியாது மார்ஜால்.

“மா, தயவுசெய்து மா,” அவர்கள் கெஞ்சினார்கள், “ஆடுகளுக்கு தீனியும் தண்ணியும் தரவேண்டும் அம்மா”.

“வண்டி ஓட்ட என்னால் இயலாது” பதிலளித்தார் அவர்.

“கார்கள் சாலையில் போகவே கூடாது”.

சந்தடி செய்யாமல், அவர்கள் இருவரும் பள்ளிக்குப் புயலில் ஏழு மைல்கள் நடந்தே வந்துள்ளார்கள். ஆடுகளை வாஞ்சையோடு

கவனித்திருக்கிறார்கள். ஆமியும் க்ரிஸ்ஸும் தவித்துக்கொண்டிருந்த அவர்களின் அம்மாவை மீண்டும் சென்றடைய ஆறு மணி நேரம் ஆனது.

அதற்குப் பின் பண்ணைவீடு புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. விலங்கு கூண்டுகள் நீக்கப்பட்டன. ஆனால் கொட்டகைகள் இன்னமும் உள்ளன. இப்போதும் பள்ளியில் குதிரை வளர்க்க இயலும். ஒவ்வொரு காலகட்டத்திலும் சில மாணவர்கள் கட்டாயம் அதை ஒரு கை பார்ப்பார்கள்.

விலங்குகள் வளர்ப்பின் மேலான குழந்தைகளின் ஈடுபாடு ஒட்டு மொத்தமாய் விலகும்வரை.

# 8

# வேதியியல்

எல்லாக் காலத்திலுமே, அவ்வப்போதிருக்கும் மோகம் மறைந்து, வேறொன்று துளிர்ப்பது இயற்கைதான்.

நான் இளைஞனாய் இருக்கும் சமயத்தில், சுத்துவட்டார மேதாவிகள் எல்லாம் எப்போதும் வேதியியல் வல்லுனர்களாக இருந்து வைத்தார்கள். அநேக மணிநேரங்களை அவர்கள் தங்கள் வீட்டின் அடித்தளத்தில் அமைத்திருந்த ஆய்வுக்கூடத்திலேயே கழித்தார்கள். அவ்வப்போது தீ விபத்தோ அல்லது வெடிப்புச் சத்தமோ எங்கள் காதுகளை எட்டும் - மடத்தனமான இளம் விஞ்ஞானி ஒருவன் கலக்கக் கூடாததைக் கலந்ததனால் வந்த வினை!

அறுபதுகளின் பிற்பாடுகளில் இப்படியாப்பட்டவை நடுநாயகத்திலிருந்து கொஞ்சம் விலகிவிட்டன. எங்கள் பள்ளியில் அனுபவம் வாய்ந்த ஹேனா பணியாற்றிக் கொண்டிருந்தாலும்கூட, இதற்கான தேவையே எழவில்லை.

நாங்கள் வேதியியல் கூடம் இல்லாமல்தான் பள்ளியைத் துவக்கினோம். பல வருடங்களுக்கு அதுவும் அப்படியே இருந்தது.

திடீரென்று ஒருநாள் பல மாணவர்களுக்கு வேதியியல் மேல் ஈர்ப்பு வந்தது. ஏதாவது செய்தாக வேண்டும். அந்த சமயத்தில் எதற்குமே பணம் கையில் கொஞ்சமுமே இல்லை. எழுபதுகளின் துவக்கம் அது. ரொம்பவுமே பேராட்டம்தான். உபகரணங்களின் விலையோ கைக்கு எட்டும் அளவில் இல்லை. மற்ற ஒவ்வொரு

பள்ளியும் செய்ததையே நாங்களும் செய்யப் பார்த்திருந்தோமேயானால், நாங்கள் பள்ளியைத் துவக்கியதிலிருந்து அன்றுவரை பிற எல்லாவற்றிற்கும் செய்த செலவைவிட, ஆய்வகத்திற்கு அதிகம் செய்யவேண்டியதாய் போயிருக்கும்.

பள்ளியோடு ஒன்றுவதற்கு முன்பு ஒரு உயிரி வேதியியலாளராக MITல் பணிபுரிந்தவர் ஹேனா.

அவருக்கு அங்கேயும், பிற பல்கலைக்கழகங்களிலும் நிறைய நண்பர்கள் இருந்தார்கள். அவருடைய அந்தப் பழைய கூடாரங்களின் வழிமுறை என்ன என்பது அவருக்கு அத்துப்படி. வருடாவருடம், ஜனங்கள் புது ப்ராஜெக்டுகளை ஆரம்பிப்பார்கள், அதுவும் பளபளக்கும் புது கருவிகளைக்கொண்டு. வருடம் தவறாமல், ஆயிரக்கணக்கான பழைய கருவிகளும் மரசாமான்களும் பழையது அடா என கழிக்கப்படும்.

முக்காலே மூணுவாசி புதியவற்றுக்கு ஈடாக இருக்கும் அந்தப் 'பழைய'தின் பின்னர் செல்லலாம் என முடிவெடுத்தார் அவர். பொறுமையாக, தன் தேவைப் பட்டியலைக் கையில் வைத்துக்கொண்டு, வெவ்வேறு வேதியியல் மற்றும் உயிரியல் ஆய்வகங்களுக்கு அழைப்பு வேண்டுகோள் விடுத்தார். சில வாரங்களிலேயே, தேவையான ஒவ்வொரு பொருளையும் சேகாரம் செய்தார்.

பள்ளிச் சந்தைக்காக வடிவமைக்கப்பட்ட ப்ரதியெடுப்புகள் கிடையாது இவை. இவை எல்லாம் மிகவும் நேர்த்தியானவை, சிறந்த தரமுடையவை ........